6. அறிவிப்புகள்

(அ) சட்டப்படியான அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களுக்கான ஆட்சிமன்றப் பேரவை (Senate) ஆட்சிக் குழு (Syndicate) மற்றும் மாநில நிர்வாகக் குழு (Board of Management) ஆகியவற்றிற்கு அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

பல்கலைக்கழகம்/குழு/குழுமம்	உறுப்பினர்களின் பெயர்கள்
1. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. பி.கே. சேகர்பாபு 2. திரு. வி. சோமசுந்தரம் 3. திரு. த. ஆறுமுகம் 4. திரு. ம. அப்துல் லத்தீப் 5. திரு. டி. சுதர்சனம் 6. திரு. பரிதி இளம்வழுதி
2. மதுரை-காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. கு. அன்பழகன் 2. திரு. லா. சந்தானம் 3. திரு. க. பாரமலை 4. திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்
3. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம் (ஆட்சிமன்றப் பேரவை)	1. திருமதி தமிழ்மொழி ராஜதத்தன் 2. திரு. ப. மோகன் 3. திரு. போளூர் வரதன்
4. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (ஆட்சிமன்றப் பேரவை)	1. டாக்டர் சி. விஜயபாஸ்கர் 2. டாக்டர் தே. குமாரதாஸ்
5. பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. செ.மா. வேலுசாமி 2. திரு. கோவை தங்கம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. அ. பாப்பாசுந்தரம் 2. திரு. வை. சிவபுண்ணியம்
7. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. பி.ஜி. இராஜேந்திரன் 2. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
8. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. நா. சந்திரமோகன் 2. திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்
9. பெரியார் பல்கலைக்கழகம், சேலம் (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. பி.ஆர். சுந்தரம் 2. திரு. கா.தி. இளையகண்ணு
10. அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி (ஆட்சிமன்றப் பேரவை)	1. திரு. கே.கே. உமாதேவன்
11. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை (ஆட்சிக்குழு)	1. திரு. ஆ.கு.சி. அன்பழகன்
12. தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் (நிர்வாகக் குழு)	1. திரு. இரா. வில்வநாதன் 2. திரு. எச்.எம். ராஜூ 3. திரு. கே.என். இலட்சுமணன்
13. மாநில நூலகக் குழு	1. திரு. எஸ். இராமச்சந்திரன் 2. திருமதி நளினி மனோகரன் 3. திரு. ப.வெ. தாமோதரன்
14. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் (நிர்வாகக் குழு)	1. திரு. ஆ.கு. முருகேசன்
15. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், சென்னை (நிர்வாகக் குழு)	1. திரு. ஐ. கணேசன்
16. தமிழ்நாடு அனாதைகள் மற்றும் கருணை இல்லங்கள் (நிர்வாகக் குழு)	1. திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி 2. திரு. செ. சிவசாமி 3. திரு. சி. ஞானசேகரன்

2001 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2001 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

(உ) தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் செய்யவுள்ள வேலைகளுக்கான பட்டியலைக் கொடுக்கும் கால அளவை நீட்டித்தல்

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கவனத்திற்கு நான் இந்தக் கருத்தைக் கொண்டு வருகிறேன். இது என்னுடைய கருத்து அல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருடைய சார்பாகவும் இந்தக் கோரிக்கையை நான் வைக்கிறேன். நம்முடைய ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாகச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் சம்பந்தமாக அரசு ஆணை ஒன்று 5-9-2001-லே வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அரசு ஆணை நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நெப்போலியன் அவர்கள் வீட்டிற்கு ஒரு தபால் மூலமாக வந்திருக்கிறது. வேறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அநேகமாக அது வரவில்லை. எல்லோரும் இங்கே இருக்கிறோம். ஆனால், அதிலே என்ன சொல்லி இருக்கிறது என்று சொன்னால், நாளையதினம், அதாவது 15-9-2001-க்குள் அவசியம் சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலே எந்தெந்த வேலைகளை எடுக்கப் போகிறோம் என்ற பட்டியலை—அவசரமாக 15-9-2001-க்குள்—கொடுக்க வேண்டுமென்று சொல்லி வலியுறுத்தி..... (குறுக்கீடு)